**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.693/2024**
**வழக்கு சாட்சி PW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.மோகினா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்லையா | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.02.2026.

**(5, 8 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சொக்கம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.10.2020ம் தேதி, 11.20 மணியளவில் ஞானப்பிரகாஷ் என்பவரது மனைவி உஷா என்பவரை அவருடைய மகன் ஆட்டோ மூலம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை தன்னை அடையாளம் தெரிந்த 8 நபர்கள் கம்பியால் வைத்து அவரது வீட்டில் அதே தேதியில் காலை 10.00 மணியளவில் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது, அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

(1). இடது கையில் மோதிர விரலிலும், சுண்டு விரலிலும் 2 x 1 x 0.5 cm அளவில் சிதைந்த காயங்கள் காணப்பட்டன.

(2). வலது கையில் சுண்டு விரலில் 2 x 1 x 0.5 cm அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவரது இடது கைக்கு நுண்கதிர் எடுத்து பார்த்ததில் எலும்பு முறிவு சேதம் காணப்பட்டது. அதற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு 01.11.2020 ம் தேதி மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் எனச்சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று அ.சா.ஆ.3 ஆகும். காயம்பட்டவர் சொன்ன ஆயுதத்தினால் தாக்கப்படும் போது நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.16 10:43:43 +0530